மக்கள் முதல்வரின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில், மாவட்ட துணை அமைப்பாளர் வி.எஸ்.கவாஸ்கர் ஏற்பாட்டில், கோபாலபுரம் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற "முதல்வர் கோப்பை 2025 மாபெரும் பகல் – இரவு கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசுகளை, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை ஆகியோர் வழங்கி அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர். மேலும் இந்த மாபெரும் கிரிக்கெட் போட்டியினை நடத்துவதற்கு உறுதுணையாக இருந்த விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில துணை செயலாளர் வே.கௌதமன், மாவட்ட அமைப்பாளர் ராஜராஜன், துணை அமைப்பாளர்கள், ஷீபா,ஜென் கமல் ,அன்பு செழியன், ஜோஷ்வா, சதீஸ், ராஜி, குமரவேல், இருதயராஜ், உதயகுமார், எம்.செல்வம், எம். முருகன், வசந்த், ஐயப்பன், ஸ்ரீராம், சுபாஷ், சுந்தர், ராஜேஷ் ஆகியோருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன தலைமையில் மார்ச் 29 அன்று 100 நாள் (நூறு நாள்) வேலைவாய்ப்பு திட்டத்திற்க்கு நிதி வழங்காத மத்திய (மோடி) அரசை கண்டித்து காரணோடை பஜார் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சோழவரம் தெற்கு ஒன்றிய மாவட்ட நிர்வாகிகள, மாவட்ட மகளிர் ஒன்றிய அணிகளின் துணை அமைப்பாளர்கள், மகளிர் பொதுமக்கள மற்றும் 100 நாள் வேலைவாய்ப்பில் பணிபுரியும் மகளிர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சோழிங்கநல்லூர் தொகுதி கொட்டிவாக்கம் பகுதியில்

நவீன மீன் விற்பனை அங்காடி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது!

சட்டப்பேரவையில் அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் தகவல்! – ச.அரவிந்த் ரமேஷ் நன்றி!

சென்னை, ஏப்.01

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது சோழிங்கநல்லூர் தொகுதி உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் கேட்ட கேள்வியும், அதற்கு அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் அளித்த பதிலும் வருமாறு:-

ச.அரவிந்த் ரமேஷ்: சோழிங்கநல்லூர் தொகுதி, கொட்டிவாக்கம் பகுதியில் நவீன மீன் விற்பனை அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: சோழிங்கநல்லூர் தொகுதி, கொட்டிவாக்கம் பகுதியில் நவீன முறையில் மீன் விற்பனை அங்காடி அமைக்கும் பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ச. அரவிந்த் ரமேஷ்: நம்முடைய நாடாளுமன்றத்தின் உறுப்பினர் தமிழச்சி தங்கப் பாண்டியன் அவர்களுடைய நிதியில், கொட்டிவாக்கம் பகுதியில் 62.50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகள் நடைப்பெற்று கொண்டிருந்தாலும்கூட, அந்தப் பகுதியின் பக்கத்தில் இருக்கின்ற நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் போன்ற பகுதிகளிளெல்லாம் மீன் விற்பனை அங்காடிகளை உருவாக்கித் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த பகுதி மக்களெல்லாம்

மீன் வாங்குவதற்கு காசிமேடு, சைதாப்பேட்டை, சிந்தாதரிப்பேட்டை, வானகரம் போன்ற மொத்த வியாபாரங்கள் செய்கின்ற பகுதிக்கு சென்று, சில்லறை வியாபாரம் செய்ய மீன்களை வாங்கி வருகின்றார்கள். குறிப்பாக, பெண்கள் இரவு நேரங்களில் சென்று, மீன்களை வாங்கி வரவேண்டிய நிலை உள்ளது. இவையெல்லாம் கருத்தில் கொண்டு, ECR OMR இணைப்புச் சாலையில் வடக்குப் பகுதியில் உள்ள இடத்தில் நவீன மொத்த மீன் விற்பனை அங்காடி அமைத்துத் தந்து, மீனவ சமுதாய மக்களுடைய எதிர்பார்ப்பைநிறைவேற்றித்தர, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: பொதுவாக மீன் விற்பனை அங்காடி அமைக்கும் பணிகள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. ஓர் இடத்தில் மீன் அங்காடி அமைக்க தேவை இருக்குமானால், தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகள் அதற்கு சொந்தமான இடத்தில், இடம் தேர்வு செய்ய வேண்டும். இடம் தொடர்பான தகவல்களுடன் மீன் அங்காடியில் எத்தகைய வசதிகளை ஏற்படுத்தவேண்டுமென்ற, விவரங்களை எங்கள் துறைக்கு அளிக்கும்பட்சத்தில் மீன் அங்காடி அமைப்பது தொடர்பான கருத்துருவை மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை தயாரிக்கும். மீன் அங்காடி அமைப்பதற்காகும் செலவினத்தில் ஒரு பகுதியை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் ஏற்கும்பட்சத்தில் துறையின்மூலம் மீதமுள்ள நிதி ஆதாரங்களை கண்டறிந்து உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி, மீன் அங்காடி அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ச. அரவிந்த் ரமேஷ்: மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் மீன்வளம் மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும் 17.2.2024 அன்று நயினார் குப்பம் முதல் ஓடை குப்பம் வரை இருக்கும் மீனவ சமுதாய பிரதிநிதிகளை அழைத்து குறைகளை கேட்டறிந்ததற்காக, முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீனவ சமுதாய பிரதிநிதிகள் வருகை தந்தபோது கொட்டிவாக்கம், பாலவாக்கம், சின்ன நீலாங்கரை, பெரிய நீலாங்கரை, சின்னாண்டிகுப்பம், பள்ளத்தெரு, மேட்டுத்தெரு, பனையூர் குப்பம், நயினார் குப்பம் போன்ற மீனவ சமுதாய மக்கள் வாழ்கின்ற பகுதியில், வலை பின்னுவதற்கும் அதனை பாதுகாப்பதற்கும், கடல் அரிப்பை தடுப்பதற்கும், தடுப்பு சுவர்களும் மற்றும் அந்தப் பகுதியில் மேற்சொன்ன மீனவ சமுதாய மக்கள் வாழ்கின்ற குடியிருப்பு பகுதிகளுக்கு அருகில் கடல் நீர் உள்ளே வருவதனால், அந்தப் பகுதியில் கடல் அரிப்பை தடுப்பதற்கு தூண்டில் வளைவுகளை அமைத்துத் (மணியடிக்கப்பெற்றது) தர வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, நயினார் குப்பம் பகுதி ஊராட்சியாக இருந்தபோது சாலைகளெல்லாம் போடப்பட்டு, மக்கள் பயன்படுத்தி வந்தார்கள். Mandous புயலால் அந்தப் பகுதி சாலைகள் பழுதடைந்தது, சென்னை மாநகராட்சி மூலமாக அதற்கான நிதிகள் ஒதுக்கப்பட்டு, அதேபோல பனையூர் குப்பத்தில் ஒரு கட்டடத்திற்கும் என இரண்டிற்கும் சேர்ந்து நிதிகள் ஒதுக்கப்பட்டு சாலைகள் போடும் போது, (மணியடிக்கப்பெற்றது) CRZCoastal Regulation Zone அனுமதி பெறவேண்டுமென்று, (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம் அண்ணா. CRZCoastal Regulation Zone அனுமதி பெறவேண்டுமென்று அந்தச் சாலைப் பணிகள் நடைபெறாமல் உள்ளது. மக்கள் பயன்படுத்தி வந்த சாலைக்கு, இன்றைக்கு அதற்கான உத்தரவை வாங்கித் தரவேண்டுமென்று துறையின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் ஏற்பாட்டில் கடந்த 17.12.2024 அன்று சோழிங்கநல்லூரில் ஊருர் குப்பம் முதல் நயினார் குப்பம் வரை உள்ள 13 மீனவ கிராம மக்களின் பிரநிதிகள் கோரிக்கை கேட்பு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தங்கள் கிராமங்களுக்கு பல்வேறு வசதிகள் வேண்டி கோரிக்கைகள் அளித்தனர். அதில் குறிப்பாக தூண்டில் வளைவுகள், மீன் இறங்கு தளம், மீன் ஏலக்கூடங்கள் மற்றும் வலை பின்னும் கூடம் ஏற்படுத்தித்தர மீனவர்கள் கேட்டுக்கொண்டனர். மீனவர்களுடைய கோரிக்கைகள் குறித்து துறை அலுவலர்களை அனுப்பி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

தாம்பரம் மாநகரம் 5வது மண்டலம், 70 வது வார்டில் உள்ள குளத்தை தாம்பரம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணியினை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா.எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் 5–வது மண்டல குழு தலைவரும், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர்.இந்திரன், தாம்பரம் கிழக்கு பகுதி செயலாளர் ஆ.நடராஜன், பகுதி கழக நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள், மாநகர அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய திமுக மேட்டுப்பாளையம் ஊராட்சியில் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் சிறப்புரையாற்றி ஆயிரம் நபர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் பேச்சாளர் எழும்பூர் கோபி, அத்திப்பட்டு சாம்ராஜ், மு.பகலவன் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், மு.மணிபாலன், ஆ.சக்திவேல், முரளிதரன், ஜி.ரவிக்குமார், க.சு.ஜெகதீசன், தமிழ்உதயன், ஆ.ராஜா, அ.பாளையம், பா.து.தமிழரசு, நிலவழகன் கோதண்டன், தசரதன், இந்திரா சங்கர், ரவிச்சந்திரன், மோகன சுந்தர், தாஸ், செல்வமணி, முரளி, உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முனைவர் கோவி. செழியன், மாதவரம் எஸ்.சுதர்சனம், வண்ணை புகாரி சிறப்புரை! வை.ம.அருள்தாசன் ஏற்பாடு!

திருவொற்றியூர் மேற்கு பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம்!

கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., கே.ஆறுமுகம் பங்கேற்பு!

சென்னை, ஏப். 01-

திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் தொடர் நிகழ்வாக திருவொற்றியூர் அஜாக்ஸ் பேருந்து நிலையம் அருகில் இன்று 01-04-2025 மாலை 6:00 மணியளவில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 1000 பேருக்கு நல திட்ட உதவிகள் வழங்கும் விழா பகுதி கழக நிர்வாகிகள் , வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

தமிழ்நாடு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோ. வி. செழியன் எழுச்சி உரையாற்றுகிறார். தலைமை கழக பேச்சாளர் வண்ணை புகாரி சிறப்புரையாற்றுகிறார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி , கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ , கிழக்கு பகுதி கழக செயலாளர் தி.மு. தனியரசு எம்.சி, மத்திய பகுதி கழக செயலாளர் ஏ. வி.ஆறுமுகம் எம்.சி, மாவட்ட அவை தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொருளாளர் எம்.ஆனந்தன் தொகுதி பார்வையளர் ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம் மற்றும் பகுதி கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள பங்கேற்க உள்ளார்கள். இந்த மாபெரும் பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முக வர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்கிறார்கள்.

கோடை காலத்தை முன்னிட்டு, மக்களின் தாகம் தீர்க்கும் வகையில் தியாகராயர் நகர், கிழக்குப் பகுதி, 141 வது வட்டத்திற்கு உட்பட்ட இரண்டு இடங்களில் நீர் மோர் பந்தலை மக்கள் பயன்பாட்டிற்காக தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி திறந்து வைத்தார். தியாகராயர் நகர் முத்துரங்கன் சாலையில் அமைந்துள்ள கிழக்கு பகுதி அலுவலகத்தில் வட்டச் செயலாளர் லலிதாபுரம் என்.துரை ஏற்பாட்டில், தியாகராயர் நகர் பேருந்து நிலையம் அருகில் பகுதிப் பிரதிநிதி தி.நகர் எம்.பாபு, 141 வது வட்ட இளைஞர் அணி கே.கார்த்திக் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ.ஞானகிராமன், வட்டச் செயலாளர் பி.மாரி, வட்ட நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.